

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 302 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – வைகாசி 30 – புதன்கிழமை 12 ஜூன் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 302 : Thiruvalluvar Year - 2055 - Vaikasi 30 - Wednesday 12 June 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# ஜூன் 15-ல் கோவையில் முப்பெரும் விழா!

## பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அறிவிப்பு!





**சென்னை, ஜூன் 12-**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக முப்பெரும் விழா வருகிற 15ஆம் தேதி கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மாலை 4 மணியளவில் நடைபெறுகிறது.**

இது குறித்து கழக பொதுச்செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்களது அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் கடந்த சனிக்கிழமை (ஜூன் 8 ஆம் நாள்) அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற “கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என “முப்பெரும் விழா” ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஜூன் 14 ஆம் தேதிக்கு பதிலாக “ஜூன்15ஆம் தேதி மாலை 4 மணியளவில் கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில்” நடைபெறுகிறது.

**கூட்டணி கட்சித் தலைவர்கள் - வெற்றி பெற்ற 40 எம்.பி.க்கள் பங்கேற்பு!**

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் நம் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், வெற்றிபெற்ற நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் செவ்வனே மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## மாணவச் செல்வங்கள் அனைவருக்கும்

# இக்கல்வியாண்டு இனிதே அமைய வாழ்த்துகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, ஜூன் 12 -**

**கோடை விடுமுறை முடிந்து பள்ளி - திரும்பும் மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் இக்கல்வியாண்டு இனிதே அமைய வாழ்த்துகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

கோடை விடுமுறை முடிந்து தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) பள்ளிகள் திறக்கப்பட்டன. தமிழ்நாட்டில் 10, 11, 12ம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு கடந்த மார்ச் மாதம் 1ந் தேதி முதல் ஏப்ரல் மாதம் 8ந் தேதி வரை நடத்தப்பட்டது. அதேபோல், இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலும் வந்ததால், இதர வகுப்புகளுக்கும் வழக்கத்தைவிட முன்கூட்டியே ஆண்டு இறுதித் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டன.

அதன்படி 1 முதல் 3ம் வகுப்பு வரையிலான குழந்தைகளுக்கு ஏப்ரல் 2 முதல் 5ந் தேதி வரையும், 4 முதல் 9ம் வகுப்பு மாணவர்களுக்கு ஏப்ரல் 2 முதல் 23ந் தேதி வரையும் ஆண்டு இறுதித்தேர்வுகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து, பள்ளி மாணவர்களுக்கு ஏப்ரல் 24ந் தேதி முதல் கோடை விடுமுறை விடப்பட்டது.

வழக்கமாக பள்ளி மாணவர்களுக்கு மே மாதத்தில் கோடை விடுமுறை விடப்பட்டு, ஜூன் மாத தொடக்கத்தில் பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும். ஆனால், இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் கடந்த 4ந் தேதி வெளியாக இருந்ததால், 6ந் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என பள்ளி கல்வித்துறை அறிவித்து இருந்தது. இதனிடையே கடும் கோடை வெயில் மற்றும் வெப்ப அலை காரணமாக பள்ளிகள் திறப்பை தள்ளிப்போடுமாறு எழுந்த கோரிக்கைகளை அடுத்து, 10ந் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) பள்ளிகள் திறக்கப்பட்டன.

**பாடப்புத்தகங்கள்**

அரசு, அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுகள் முதல் நாளே வழங்கப்பட்டன. அந்த வகையில் 70 லட்சத்து 67 ஆயிரம் மாணவ - மாணவிகளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதோடு, 60 லட்சத்து 75 ஆயிரம் மாணவ - மாணவிகளுக்கு நோட்டுகளும், 8 லட்சத்து 22 ஆயிரம் மாணவ-மாணவிகளுக்கு புவியியல் வரைபடமும் வழங்கப்பட்டது. கல்வியாண்டை உற்சாகமாக தொடங்க உதவும் வகையில், கல்வியாண்டின் முதல் நாளிலேயே இவை வழங்கப்பட வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை ஏற்கனவே உத்தரவிட்டு உள்ளது. இவை தவிர்த்து, தமிழக அரசின் சார்பில் புத்தகப்பை, காலணி, மழைக்கோட்டு, சீருடைகள், வண்ண பென்சில் மற்றும் கிரையான்கள், ஜாமின்ட்ரி பாக்ஸ் உள்ளிட்டவையும், அவை அவசியப்படும் மாணவ - மாணவிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

புதிய இலவச பஸ் பயண அட்டைகள் வழங்கப் படும் வரை ஏற்கனவே உள்ள பழைய அட்டையைப் பயன்படுத்தி மாணவர்கள் கட்டணமின்றி அரசு பஸ்களில் சீருடையுடன் பயணிக்கலாம் என போக்குவரத்து துறை அறிவித்துள்ளது.

இதற்கிடையே பள்ளிகளுக்குத் திரும்பிய மாணவ - மாணவிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**கோடை விடுமுறை முடிந்து இன்று பள்ளி திரும்பும் குழந்தைகள் அனைவருக்கும் இக்கல்வியாண்டு இனிதே அமைய வாழ்த்துகிறேன்!**

**பெற்றோர்களும், ஆசிரியர்களும் மீண்டும் வகுப்பறைக்குள் அடியெடுத்து வைக்கும் மாணவச் செல்வங்களின் மனநிலை - உடல்நிலை ஆகியவற்றில் கவனம் செலுத்தி, வாசிப்பிலும் விளையாட்டிலும் மாணவர்களுக்கு ஊக்கமூட்டி இருக்கும்படி பார்த்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி

## புதுடெல்லியில் ஆர்ப்பாட்டம்!

### மாணவர்கள் நடத்தினர்!

புதுடெல்லி, ஜூன் 12–

நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி புதுடெல்லியில் ஒன்றிய கல்வித்துறை அமைச்சகத்தை முற்றுகையிட்டு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நீட் தேர்வால், ஏழை எளிய மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தேர்வால் ஏராளமான மாணவர்கள் தங்களது இன்னுயிரை மாய்த்துள்ளனர். இதனால் நீட் தேர்வை ரத்து செய்ய தி.மு.க. அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இதற்கிடையே அண்மையில் நடைபெற்ற நீட் தேர்வில் கருணை மதிப்பெண்கள் வழங்கியது, ஒரே தேர்வு மையத்தைச் சேர்ந்த 6 பேர் முதலிடம் பெற்றது உள்ளிட்ட விவகாரங்கள் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதனால் இந்த நீட் தேர்வு முறைகேட்டைக் கண்டித்து மாணவர்கள் போர்க்கொடி தூக்கி உள்ளனர். இந்த நிலையில் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி டெல்லியில் கல்வித் துறை அமைச்சகம் உள்ள சாஸ்திரி பவன் எதிரே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி அவர்கள் அப்போது முழக்கங்களை எழுப்பினர்.

---

அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு

## மாணவர் சேர்க்கை பொதுப் பிரிவு கலந்தாய்வு!

### ஜூன் 15 வரை நடைபெறுகிறது!

*சென்னை, ஜூன் 12-*

*அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் இளநிலை பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு நேற்று முன்தினம் தொடங்கியது.*

*தமிழக உயர்கல்வித் துறையின் கல்லூரி கல்வி இயக்ககத்தின் கீழ் 169 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இதில்,பி.எஸ்.சி. பி.காம். பி.ஏ என பல்வேறு பாடப்பிரிவுகளில் 1 லட்சத்திற்கு மேற்பட்ட இளநிலை பட்டப் படிப்பு இடங்கள் உள்ளன. இதற்கிடையே 2024-25ம் கல்வியாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு, கடந்த மாதம் 6ந்தேதி தொடங்கி 24ந்தேதி வரை நடைபெற்றது. 2 லட்சத்து 58 ஆயிரத்து 527 மாணவர்கள் விண்ணப்பித்தனர். அதில், 2 லட்சத்து 11 ஆயிரத்து 10 பேர் விண்ணப்ப கட்டணத்தை செலுத்தியுள்ளனர்.*

*விண்ணப்பித்த மாணவர்களுக்கு கடந்த மாதம் 28ம் தேதி முதல் 30ந்தேதி வரை சிறப்பு பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு நடைபெற்றது. இதில், ஏராளமான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு கல்லூரிகளை தேர்வு செய்தனர்.*

*இந்நிலையில், பொதுப்பிரிவினருக்கான முதற்கட்ட கலந்தாய்வு நேற்று முன்தினம் காலை தொடங்கியது. சென்னை மாநில அரசு கலைக் கல்லூரி மற்றும் காயிதே மில்லத் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல் பிரிவில் சேர்வதற்காக 3000க்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் முதல் கட்ட பொதுப் பிரிவு கலந்தாய்வில் கலந்து கொண்டனர்.*

*முதற்கட்ட கலந்தாய்வு நேற்று முன்தினம் முதல் 15ந் தேதி வரை நடைபெறுகிறது. தரவரிசை பட்டியல் அடிப்படையில் மாணவர்கள் கலந்தாய்வுக்கு அழைக்கப்படுவார்கள்.*

*2ம் கட்ட பொதுப் பிரிவு கலந்தாய்வு வருகிற 24ந்தேதி முதல் 29ந்தேதி வரை நடைபெற உள்ளது. கலந்தாய்விற்கு பின்னர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு வகுப்புகள் அடுத்த மாதம் 3ந்தேதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

---

ஜூலை 10 ஆம் தேதி

## விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல்!

### தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜூன் 12–

தமிழ்நாட்டில் காலியாக உள்ள விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு ஜூலை 10 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

7 மாநிலங்களில் காலியாக உள்ள 13 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு இடைத்தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. விக்கிரவாண்டி தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. புகழேந்தி உயிரிழந்ததால் அங்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள தொகுதிகளுக்கான வேட்பு மனுத்தாக்கல் வருகிற 14 ஆம் தேதி தொடங்கும் ஆணையம் அறிவித்துள்ளது. வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய ஜூன் 21 ஆம் தேதி கடைசி நாளாகும். மனுக்கள் மீதான பரிசீலனை 24 ஆம் தேதி நடைபெறும், மனுக்களை திரும்பப்பெற ஜூன் 26 ஆம் தேதி கடைசிநாளாகும்.

அறிவிக்கப்பட்டுள்ள 13 தொகுதிகளிலும் ஜூலை 10 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூலை 13 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. விக்கிரவாண்டி தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு இருப்பதை அடுத்து விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளது.